Reg. No:.......................

Code No. SS7342

Sub. Code: PTLM22

M.A. (CBCS) DEGREE SPECIAL SUPPLEMENTARY EXAMINATION, APRIL 2020

SECOND SEMESTER

தமிழ் – Core

இலக்கணம் II – தொல்காப்பியம் - சொல்

(For those who joined in July 2017 onwards)

Time Three hours

Maximum: 75 marks

பகுதி அ - (10x1=10 மதிப்பெண்கள்)

அனைத்து வினாக்களுக்கும் சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக:

1. அப்பொருள் கூறின் ............... கூறல்

அ) விளக்கிக் ஆ) சுட்டிக் இ) எடுத்துரைத்துக் ஈ) சான்றுடன்

2. ஏழாம் வேற்றுமையுடன் தொடர்பில்லாது எது?

அ) பின் ஆ) அயல் இ) கை ஈ) உழை

3. இரண்டாம் வேற்றுமை ஐ யின் 'சார்தல்' என்ற பொருட்பாகுபாட்டின் வகைகள் எத்தனை?

அ) 2 ஆ) 3 இ) 4 ஈ) 5

4. உயர்திணைப் புள்ளி ஈறுகளில் அன் இறுதி என்னவாகும்?

அ) கெடும் ஆ) இயல்பாகும் இ) அகரமாகும் ஈ) ஆவாகும்

5. பொருந்தாதவற்றைக் கண்டுபிடிக்க

அ) யான் ஆ) யாம் இ) நாம் ஈ) யாவை

6. 'ஓகார' இடைச்சொல் உணர்த்தும் பொருள்களின் எண்ணிக்கை

அ) 8 ஆ) 6 இ) 4 ஈ) 3

7. 'இலம்பாடு' என்ற சொல் உணர்த்தும் பொருள்

அ) பரத்தல் ஆ) திரட்சி இ) அகலம் ஈ) வறுமை

8. 'ஈ' என்பது யாருடைய கூற்று

அ) ஒப்போன் ஆ) இழிந்தோன் இ) உயர்ந்தோன் ஈ) நண்பரின்

9. நன்னூலின் சொல்லதிகாரத்தின் மொத்த இயல்கள்

அ) 5 ஆ) 4 இ) 6 ஈ) 9

10. 'வழு' என்ற சொல்லின் பொருள்

அ) வழுக்குதல் ஆ) அமைதி இ) குற்றம் ஈ) மயக்கம்

**பகுதி – ஆ (5x5=25 மதிப்பெண்கள்)**

**அனைத்து வினாக்களுக்கும் 250 சொற்களுக்கு மிகாமல் விடை தருக**

11. அ) கிளவியாக்கம் சுட்டும் பால் உணர்த்தும் சொற்கள், ஈறுகள் எவையெவை? விளக்குக

**(அல்லது)**

ஆ) பெயர் வேற்றுமையின் இயல்பினை விளக்குக

12. அ) முதலும் சினையும் உருபேற்கும் விதம் குறித்தெழுதுக

**(அல்லது)**

ஆ) விளியேலாத பெயர்கள் எவையெவை? விளக்குக

13. அ) வினையெச்சம் குறித்த தொல்காப்பியச் சிந்தனையினைத் தெளிவுறுத்துக

**(அல்லது)**

ஆ) இடைச்சொல்லின் இலக்கணம் யாது? அதன் வகைகளை விளக்குக

14. அ) உரிச்சொல்லின் பொதுவிலக்கணத்தை உரியியல் எங்ஙனம் கட்டமைக்கின்றது?

(அல்லது)

ஆ) இலக்கியத்தில் இடம்பெறும் நான்குவகைச் சொற்கள் யாவை? சான்றுடன் விளக்குக

15. அ) 'கடி' என்ற உரிச்சொல் பொருள் உணர்த்தும் முறையில் தொல்காப்பியத்திற்கும் நன்னூலுக்குமான வேறுபாடுகளைச் சுட்டுக

(அல்லது)

ஆ) நன்னூல் வினையினை எவ்வாறு பாகுபாடு செய்கிறது? விளக்குக

## பகுதி – இ (5x8=40 மதிப்பெண்கள்)

**அனைத்து வினாக்களுக்கும் 600 சொற்களுக்கு மிகாமல் விடை தருக**

16. அ) திணை, எண், இடம் குறித்துத் தொல்காப்பியர் கிளவியாக்கத்தில் கூறும் செய்திகளைச் சுருக்கி எழுதுக

(அல்லது)

ஆ) இரண்டாம் வேற்றுமை என்றால் என்ன? அதன் பொருட்பாகுபாடுகளைச் சான்றுகளுடன் விளக்குக

17. அ) உருபின் இயல்புகளாக வேற்றுமை மயங்கியல் கூறுவனவற்றை ஆய்க

(அல்லது)

ஆ) உயர்திணையில் புள்ளி ஈறுகள் விளியேற்கும்போது அடையும் மாற்றங்களை எடுத்துரைக்க

18. அ) உயர்திணைப் பெயர் வகைகளைச் சான்றுகளுடன் நிறுவுக

(அல்லது)

ஆ) உயர்திணைக்குரிய வினைகளாகத் தொல்காப்பியர் கூறுவனவற்றை ஆய்க

19. அ) "தொல்காப்பிய உரியியல் அகராதியின் தோற்றத்திற்குக் காரணமாயிற்று" – இக்கூற்றினை விவாதிக்க

(அல்லது)

ஆ) தொகைச்சொல் என்றால் என்ன? அதன் வகைகளைத் தெளிவுறுத்துக

20. அ) சொல்லிலக்கணக் கோட்பாட்டில் தொல்காப்பியத்திலிருந்து நன்னூல் வேறுபடுமிடங்கள் எவையெவை? மதிப்பிடுக

(அல்லது)

ஆ) தொல்காப்பியச் சொல்லதிகாரத்தின் கட்டமைப்பினை எடுத்துரைக்க